Vaikhari

ജ്യോതിഷം

പക്ഷിശാസ്ത്രം

வைத்தியம் பலதிரட்டு

1. மகாவாதங்களுக்கு எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய், வெள்ளுள்ளி, சித்தாமணக்கம்வேர், சாரணைவேர், முக்கரட்டைவேர், நன்னாரிவேர், மாவிலங்கைவேர், இலந்தைப்பட்டை, இலந்தைக்கொட்டை, கொள்ளு, சுக்கு இவை எல்லாம் போட்டுத் தண்ணீர் வார்த்து நாலிலொன்றாய்க் காய்ச்சி,

சித்தாமணக்கெண்ணெய்-3 உழக்கு (6 ஆழாக்கு)

கள்ளிப்பால்-1 ஆழாக்கு

கூட்டி இறக்கவும்.

திரிகடுகு, செவியம்,அரேணுகம், ஏலம், அசமதாகம், வெட்பாலைஅரிசி, சித்திரமூலம், சீரகம், கடுகு, பெருமரத்துப்பட்டை, சிறுதேக்கு, மரமஞ்சள், விளாவரிசி, கறிவேப்பந்தண்டு, இந்துப்பு, அஉக்டபாகம், உப்பு, அட்டுப்பு, இவை ஒவ்வொன்றும் இரு கழஞ்சு அரைத்துச் சீ கரைத்து வகையாக வைத்துக் கொண்டு உள்ளுக்குச் காசிடை கொள்ள வாதம், குன்ம சூலை, வயிற்று வாய்வு இவை எல்லாந் தீரும்.

புளி விடவும்.

பித்தத்திற்கு ஓச்சுக்கு அமிர்தாதி எண்ணெய்

சீந்திக்கொடி இலை	-	10
முத்தக் காசு	-	10
நன்னாரிவேர்	-	10
(இலா) இலாமிச்சம்வேர்	-	1
வெட்டிவேர்	-	1

இவைகளை இடித்து இருநாழி நீரிற்ப் போட்டு குறுணி யர்க்காய்ச்சிப் பிழிந்து வடித்து ஏலரிசி, இலவங்கப்பட்டை, அதிமதுரம், பச்சிலை, சாதிக்காய், அதாவரிசி, கண்டில்வெண்ணெய், கடுகுரோகிணி, நெய்தல்க்கிழங்கு நறும்பிசின், அடவிக் கச்சோலம், செண்பகப்பூ, முத்தக்காசு, மஞ்சிட்டி இவை தன்னி முப்பது களஞ்சு அரைத்து நல்லெண்ணை -4, பால்-4 கட்டிப்

பதத்தில் வடித்து புகுகு கட்டிச் கலந்து தலையில் நனைக்கவும்.

<u>தீரும் வியாதி :</u> பித்த வகையுள்ளதும், உடம்பிலுள்ள உஷ்ணமும், மகாபாத அந்திரதாகம் என்னப்பட்ட ரோகம், இரத்த பித்தம் இவை எல்லாந் தீரும்.

<u>பித்தம், தலைவலி, தலைநோவுக்கு கத்தாழை என்ணெய்</u>

கத்தாளைச் சோறு வாங்கி அந்தச் சோற்றில் அத்திப்பட்டை தவைத்துப் போட்டு கட்டிப் பிசறி வெய்யலில் வைக்கத் தண்ணீர் விடும். அந்தத் தண்ணீரை வடித்து, அந்தத் தண்ணீர் சுண்டமரியாதியதிலே கலந்து, ஆவின்பால் - குறுணி இளநீர் நா நாழி விட்டுச் கலந்து இதில் கலக்கவும். சாதிக்காய், மாஞ்சில், அகில், சந்தனம், இருவேலி, இலாமிச்சம், திப்பிலி, நெல்லிமுளி, தாமரை வளையம், செங்கழுநீர்க் கிழங்கு, கொட்டிக்கிழங்கு.

இது நாழிக்கு விராகனிடை கட்டி ஒரொன்று பாலில் அரைத்துச் கரைத்து பதத்தில் வடித்துத் தலையில் நனைக்கவும்.

<u>எப்பேர்ப்பட்ட இருமலுக்கும் மருந்து</u>

ஆதண்டந்தழை	- தட்டிடை -	4
நெத்பொரி	- தட்டிடை -	1
மிளகு	- தட்டிடை -	2

இவை எல்லாம் இளம் வறுப்பாய் பொன்னிறமாய்ச் சூரணித்து வஉஸ்த்திரகாயம் செய்து கொண்டு கொம்புத் தேனில் குழைத்து இரண்டு நேரமும் சாப்பிட இருமல் நிற்கும்.

<u>சூதக வயித்துவலி, வாய்வு, இழுத்துப் பிடித்தலுக்கு என்ணெய்</u>

விளக்கெண்ணெய்	- படி	- ½
வெள்ள வெங்காயம்	- பலம்	- ½
சீரகம் பொடி செய்தது	பலம்	- ½

இவைகளெல்லாம் சேர்த்துக் கொடுக்கவும். வயித்து வலி, சூதக வாய்வு, வயிறு இழுத்துப் பிடித்தாலும் தீரும்.

சூதக வாய்வுக்கு ஒரு நேரம்

ஐந்து லவங்கம் நெய்யில் வறுத்து மூன்று நாட்களி சாப்பிடவும். சூதக வாய்வு தீரும்.

கண் சிவப்புக்குத் துளசி எண்ணெய்

நல்லெண்ணெயில் துளசிச்சாறு, நல்ல சீரகம், கூட்டி எண்ணை பண்ணி தலை நனைத்து முழுகவும். கண் சிவப்புத் தீரும்.

மந்தாரகாசம், மேல்ச் சுவாசம், கோழை, ஈளை இவைக்கு எண்ணெய்

ஆடாதோடை, கண்டங்காலி, கையாந்தகரை, தூதுவளை குப்பைமேனி, கௌத்கடை, பொருமபில், பிறாமுட்கு, சங்கு, சிறுவழுதலை, இன்பூரல், நாய்ப்பாகல் கோவை இலைச்சாறு ஒரொன்று நாழி. இதில் திப்பிலி மூக்குளம், இலவங்கம், கற்கடகசிங்கி, சிறு தேக்கு, இந்துப்பு, அதிவிடயம், அதிமதுரம், தேவதாரம், சுக்கு, சவுக்காரம், தவக்ஷீசை, சீரகம், கோஉஷ்டம் (இவை) படிக்குக் கழஞ்சு. இவை பாலில் அரைத்துக் கலத்து நல்லெண்ணெய் வேண்டியது விட்டுப் பதத்தில் வடித்து தினம் மூன்று காசிடை கொள்ளவும்.

கர்ப்பிணிப் பெண்களின் சூலைக்கு எண்ணெய்

விளக்கெண்ணை	-	1படி
பரங்கிப்பட்டை	-	1படி
கருஞ்சீரகம்	-	5 விராகனிடை
நற்சீரகம்	-	5 விராகனிடை
காராம்பு	-	5 விராகனிடை
திப்பிலிமூலம்	-	5 விராகனிடை
நிலப்பனைக்கிழங்கு	-	5 விராகனிடை

புளியரணைக் கிழங்கு	5 விராகனிடை
சாரணைவேர்	5 விராகனிடை
ஈரவெங்காயம்	5 படி

வேரை தொலித்துக் கொண்டு பரங்கிப்பட்டையை சிறுக்க சிறுக நறுக்கி எண்ணெயை கொதி வரவிட்டு ஈரவெங்காயத்தை இரண்டாகத் தரித்து கொதிக்கும் எண்ணெயில் போடவும்.

ஈரவெங்காயம் வெந்து தரலி எல்லாம் மெதுவான போதே இறக்கிக் கொண்டு, அதில் கடைச்சரக்கு பரங்கிப்பட்டை கூடப் போட்டு இறக்கி ஏழு மாதத்தில் 30 நாட்கள் உட்கொள்ளவும். ஒவ்வொரு கரண்டி உட்கொள்ளவும்.

பத்தியம்: அகத்திக்காய், பசுநெய், ஈரவெங்காயம், நத்சுப்புக் கூட்டவும். சம்பஞ்சோறாவது, புழுங்கல் அரிசியாவது கூட்டவும். வீக்கம் முதலானதும் போம்.

கபால சன்னிக்கு எண்ணெய்

ஈரவெங்காயத்தை விளக்கெண்ணெயில் கிள்ளிப் போட்டு சத்தாளைச் சாறுவிட்டு குழியபுடம் வைத்து ஆதிவார னாள் செய்து காதுக்கு விடவும்.

பத்தியம்: புளி, கிரந்திப் பண்டம் கூட்டாமலிருக்கவும்.

கபாலச் சன்னி தீரும்.

கிராணிக்கு அருளாதி எண்ணெய்

பெருமரப்பட்டை	-	10
குடசப்பாலைப்பட்டை	-	10

இவை யிரண்டையும் இடித்து குழனித் தண்ணீரிலிட்டு எட்டொன்றாக்கி வடித்து இதில் நல்லெண்ணெய் படி- 1, தயிர் படி- 1 ஆகியவற்றைக் கலந்து, இதற்கு வெள்ள வெங்காயம், சுக்கு, மிளகு,

திப்பிலி, அசமதாகம், கருஞ்சீரகம், கிராம்பு இது வகைக்கு பலம்– 1 சேர்த்து சூரணம் செய்து என்னெயில் போட்டு மெழுகு பதத்திலிறக்கவும்.

ஒரு நேரத்திற்கு ஒரு கரண்டி, சர்க்கரையுடனே இரண்டு நேரமுங் கொள்ளவும். ஆறுவகை மூலம் கிராணியுந் தீரும்.

அஉஷ்ட்ட கிராணிக்கு அருளாதி என்னெய்

பெருமரத்துப் பட்டை	–	50 பலம்
அத்திப்பட்டை	–	10 பலம்
நாவல்ப்பட்டை	–	10 பலம்

இது துவைத்து இருதூணி நீர்விட்டு அதை எட்டிலொன்றாய்க் காய்ச்சி அதில் நல்லென்னெய் ஒருபடி விட்டு குழாவிக் காய்ச்சி இதக்கு கற்கம் சுக்கு, அசமோதாகம், கிராம்பு, சாதிக்காய், வெள்ளிலோத்திரம், அதிவிடையம், இலவம்பிசின், விளாம்பிசின் வில்லப்பிசின் இவை ஒவ்வொன்றும் இரு கழஞ்சு எடுத்து அரைத்துக் கரைத்துப் பதத்திலிறக்கவும். சர்க்கரையுடனே ஒரு கரண்டி கொண்டு வரவும்.

இதக்கு அஉஷ்ட்ட கிராணியும் குன்மம் முதலான வயிற்று வியாதியுந் தீரும்.

மரண வாத சன்னிக்கு இந்திராணி என்னெய்

புன்னெண்ணெய், வேப்பெண்ணை, இலுப்பெண்ணை, நல்லென்னை, விளக்கெண்ணை, சவுரிக்கொற்றுவேர், அமுக்குராவேர், மிளகரணைவேர், கொளிஞ்சிவேர், பன்னைத்து வேர், அவுரிவேர், தராய்வேர், பாகல்வேர், ஊமத்தம்வேர், நாரத்தம்வேர், பூனைக்காஞ்சி வேர், கிடாக்குரம்பை, முசுமொட்டை, பச்சைப் பாம்பு, நல்ல பாம்புத் சன்டம், அரத்தை, மஞ்சள், பூதகரப்பன்பட்டை அத்தித்திப்பிலி, திப்பிலிமூலம், சிறு தேக்கு, சிவனார்வேம்பு, வலம் புரிக்காய், காரம்பு, சுக்கு திப்பிலி, வெள்ளவெங்காயம், பெருங்காயம், இரண்டு காசிடை வசம்பு. ஆக மருந்து 14.

பூனாகம் இரண்டரைப்படி என்ணைக்கு இந்த அவிசதங்களெல்லாம் எலுமிச்சங்காய் மருவாதி அரைத்துக் கூட்டிக் கொள்ளவும்.

இரத்த பித்தம் கண்நோய், தலை நோய்க்கு இளநீர் என்னெய்

இளநீர் - 4, நல்லெண்ணை - 4, படி ஆவின்பால் - 4படி இதில் கறக்கும் (குடிநீர்) ஏலம், இலவங்கம், அதிமதுரம், சந்தனம், குங்குமம், அகில், பச்சிலை, நாகப்பூ, தகரம், மாஞ்சில், கச்சோலம், அடவிக்கச்சோலம், சாதிக்காய், கிராம்பு, தேவதாரம், மஞ்சட்டி, கடுகுரோகிணி, செண்பகப்பூ, வெவ்வள்ளிக்கொடி, செவியம், சிறு மூலகம், சிறுதேக்கு, வெள்ளிலோத்திரம், தாமரை இதழ், தண்ணிவிட்டான் கிழங்கு, இலாமிச்சம், முத்தக்காசு, இருவேலி, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரை வளையம் இவை ஓரொன்று நாழிக்கு ஒருபடி பால் விட்டரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து தலை ஒன்பது முறை நனைக்கவும். உள்ளுங் கொள்ளவும்.

தீரும் வியாதி: இரத்த பித்தி பித்தம் கண்ணெரிவு கண்நோய் தலைநோய் தீரும்.

சருவபித்தத்திற்குச் சந்தனாதித் தைலம்

சந்தனம் பலம்- 1, இலுப்பைப்பூ - பலம் மகிழம்பூ-பலம் நன்னாரிவேர், எலுமிச்சம்வேர், வெட்டிவேர், செண்பகப்பூ, கோரைக்கிழங்கு, நெல்லி வற்றல், இவை ஓரொன்று பலம் - இதக்குத் தண்ணீர்.

நாலொன்றாய்க் காய்ச்சி, அந்தக் கஷாயத்தில் நாழி என்ணை விடவும். இதக்குக் கறக்கம்.

அஞ்சனக்கல்லு, இலாமிச்சம்வேர், சீரகம், கருஞ்சீரகம், ஏலம், இலவங்கப்பத்திரி, சடாமாஞ்சி, லவங்கம், அதிமதுரம், இலுப்பைப்பூ, வெட்டிவேர், செண்பகப்பூ, சாதிக்காய், தக்கோலம், கடுகுரோகிணி, நாகேசுரம், வெட்பாலையரிசி, தகரம் (தகரை)

பூனைக்குசட்டம், தண்ணிமிட்டான் கிழங்கு, கண்டில் வெண்ணெய், கசைநீறு, கோரைக்கிழங்கு, மலாக்காய் ...நீதனம், கஸ்தூரி மஞ்சள், சாதிபத்திரி, கற்பூரம், தாமரை வளையம், முந்திரிகைப்பழம், குமுநெய்தல்க்கிழங்கு, தேவதாரம், குங்குமப்பட்டை, திரிபலை, சீந்தித்தண்டு.

இவை நாழி எண்ணைக்கு வராகனிடை பால் வார்த்தரைத்து பதத்தில் வடித்து முழுகவும்.

தீரும் வியாதி: சர்வ பித்தமும் சர்வ காசமுந் தீரும்.

மகா பூதிகாத் தைலம்

சித்தா முட்டிவேர், பெறாமுட்டிவேர், தேவதாரம், சங்கம்வேர், வாலுவாய வேர், கொடுவேலி வேர், நொச்சில்வேர், அமுக்குராவேர், எருக்கம்வேர், காட்டரணைவேர், காட்டாமணக்கம் வேர், சுக்கு, கொள்ளு, உளுந்து, துவரை, முன்னைவேர், பாதிரிவேர், சிறுவழுதிலைவேர், வாகைவேர், சித்தமல்லிவேர், பெரமல்லிவேர்.

இது ஓரொன்று சமன்கூட்டி இவை எல்லாவற்றிற்கும் சமமாக ஆயலம்பட்டை கூட்டி இடித்து, இதற்கு எட்டு பாகம் தண்ணீர் வார்த்து எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து எண்ணை குருணி வெள்ளாட்டுப்பால்த் தூணிவிட்டு இதில் பேரரத்தை இவை எல்லாவற்றிற்கும் சமமாக கஷாயம் செய்து அந்த எண்ணையில் கூடவிட்டு சற்கம்.

மஞ்சள், நன்னாரிவேர், இலாமிச்சம்வேர், கஸ்தூரி மஞ்சள், வாய் விளங்கம், குங்குமப்பூ, கடுகு, அகில் (அதில்) பேரரத்தை வட்டத் தொிப்பிவேர், தேந்த் தேவதாரம், சடாமாஞ்சில் அதிமதுரம், கறிப்பாலைவேர், நல்ல சந்தனம் இவைகளையிடித்து வஸ்திர காயஞ் செய்து எண்ணெயில் போட்டு இதில் ஆதண்டஇலைச்சாறு, நொச்சிச் சாறு, தழுதாளைச்சாறு, கொள்ளுக்கஷாயம் விட்டுப் பதத்தில் வடித்து பூனைகுசலந்து தலைச்சிடவும். வைத்துச் சுட்டவும்.

புனுகு நட்டம், தன்னிமிட்டான் கிழங்கு, கன்டில் வெண்ணெய் கூகைநீறு கோரைக்கிழங்கு மலாக்காய் ந்தனம் கஸ்தூரி மஞ்சள் சாதிபத்திதிரி கற்பூரம், தாமரை வளையம், முந்திரிகைப்பழம், குறநெய்தல்க் கிழங்கு, தேவதாரம், குங்குமப்பட்டை, திரிபலை, சீந்தில்தண்டு.

இவை நாழி எண்ணைக்கு வராகனிடை பால்வார்த்தரைத்து பதத்தில் வடித்து முழுகவும்.

<u>தீரும் வியாதி:</u> சர்வ பித்தமும் சர்வ காசமுந் தீரும்.

<u>மகா பூதிகாத் தைலம்</u>

சித்தமுட்டிவேர், பெறாமுட்டிவேர், தேவதாரம் சங்கம்வேர், வாளுவாய வேர், கொடுவேலிவேர், நொச்சில்வேர், அமுக்குராவேர், எருக்கம்வேர், காட்டரணைவேர், காட்டாணைக்கம்வேர், சுக்கு, கொள்ளு, உளுந்து, துவரை, முன்னைவேர், பாதிரிவேர், சிறுவழுதிலைவேர், வாகைவேர், சித்தமல்லிவேர், பெரமல்லிவேர்.

இது ஒரொன்று சமக்கட்டி, இவை எல்லாவற்றிற்கும் சமமமாக ஆயலம்பட்டை கூட்டி இடித்து இதற்கு எட்டுபாகம் தண்ணீர் வார்த்து எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து எண்ணை குணி வெள்ளாட்டுப்பால்த் தூணிவிட்டு இதில் பேரரத்தை இவை எல்லாவற்றிற்கும் சமமமாக கஷாயம் செய்து அந்த எண்ணையில் விட்டு கற்கம்.

மஞ்சள், நன்னாரிவேர், இலாமிச்சம்வேர், கஸ்தூரி மஞ்சள், வாய் விளங்கம், குங்குமப்பூ, கடுகு, அகில் (அகில்) பேரரத்தை வட்டத்தொிப்பிவேர், தேவதாரம், சடாமாஞ்சில் அதிமதரம், கறிப்பாலைவேர், நல்ல சந்தனம், இவைகளை இடித்து வஸ்திர காயஞ் செய்து என்ணெயில் போட்டு இதில் ஆதண்ட இலைச்சாறு, நொச்சிச் சாறு, தழுதாளைச்சாறு, கொள்ளுக்கஷாயம் விட்டுப் பதத்தில் வடித்து புனுகு கலந்து தலைக்கிடவும். வைத்துக் கட்டவும்.

<u>திரும் வியாதிகள்:</u> கபால வாய்வு, பிடரி இசிவு, கன்னத்தூலை, அற்புத வாதம், சீயப்பீனிசம், பக்கப் பீனிசம், சிரோரோகம் இவை எல்லாந் தீரும்.

...9

<u>அரக்காதித் தைலம்</u>

எருக்கிலை சமூலம், இடித்த சாறு படி-2, கள்ளிப்பால் படி-2, வாதமடக்கிச்சாறு படி -1, நொச்சிச்சாறு படி-1, காட்டு முருங்கைச்சாறு படி-1, வெள்ளாட்டுப்பால் படி-2, நல்லெண்ணெய் படி-1, வேப்பெண்ணெய் படி- விளக்கெண்ணெய் படி- இலுப்பெண்ணை படி- புங்கெண்ணை - இதுவெல்லாம் அளந்து ஒரு தாழியில் வார்த்து இதற்குச் சுறக்கம் அதிமதுரம், கோஷ்டம், சத குப்பை, தேவதாரம், ஓமம், வாய்விளங்கம், மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், வெளிச்சைபிசின், வலம்புரிக்காய், திப்பிலிமூலம், சித்திரமூலம், கடுகு ரோகிணி வெட்பாலை, அரிசி, சடாமாஞ்சில், குக்கிலு இவையெல்லாம் படிக்கு (மேற்கூறிய முடிநீரில்) இரண்டு விராகனிடை வைத்து பாலி விட்டரைத்து முன் மருந்தில் கலந்து, பெருங்காயம், ரசம், நெல்லிக்காய், கெந்தகம், வெள்ளைப்பாசானம், கெவுரிப்பாசனம், அரிதாரம், மனோசிலை, நாபி, நறுவிஷம் இவை ஒரொன்று மூன்று பணவிடை நிறுத்து அரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில் வடித்து மேலுக்கு (உடம்பில் மீது) நாற்பது நாள் இடவும்.

<u>தீரும் வியாதி</u>

சன்னி வாதம், [illegible] பக்கவாதம், எரிவாதம், நடுக்குவாதம், முருக்குவாதம், வாதம், தலுவாதம் இவைபோன்ற எண்பது வாதமும் தீரும்.

(துர்வாச)
<u>தூருவாச மாரிஷி சந்திரோதித் தைலம் மேகம்</u>

இச்சிப்பட்டை, ஆலம்பட்டை, உதியம்பட்டை, மருதம்பட்டை, அத்திப்பட்டை, மாம்பட்டை, நெல்லிப்பட்டை, நிலப்பனைக்கிழங்கு, பழம்பாசி, முத்தக்காசு, வில்லவேர், இலாமிச்சம்வேர், நன்னாரிவேர், கத்தாளம் வேர், முடிவாளம், ஆவரம்பட்டை ஆக வகைக்கு பலம்-5 (மேற்கூறிய ஒவ்வொன்றும் 5 பலம்).

இவைகளைக் கட்டி இடித்து ஒரு பானையில் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் இரண்டு படியாகக் காய்ச்சி அதில் விடுகிற சுரசம்,

... 10

தாழை விழுதச் சார் படி-2, முசுமுசுக்கைச் சார்படி -2, பாடி படி-2, விட்டு இவையெல்லாம் கூட்டித் தைலம் பண்ணிக் கொடுத்தால் தீர்ந்து போகும்.

தீரும் வியாதி : மேகம்

உஷ்ணத்திற்கு எண்ணெய்

நெல்லிப் பருப்பு பலம்-1, சீரகம் பலம்-½, கடுகுரோகணி பலம்-¼, கொத்தமல்லி பலம்-3/4 தாழை விழுதச்சார் - 1படி பசுவின்பால் - 1 படி கடை மருந்தைத் தண்ணீர் விட்டரைத்த சீரகத்தையும், எண்ணெயும் விட்டுக் கலந்து மெழுகு பதத்தில் வடித்துத் தலைக்குத் தேய்க்கவும். ஒரு நாள் இருந்து மறுநாள் முழுகவும்.

தீராத பழம் புண்ணிற்கு எண்ணெய்

பரங்கிப்பட்டைச் சூரணம்-2பலம், ரசம்-1 பலம், செந்தகம் 1பலம், தாளகம்-1பலம், சுத்தம் - தருசீ நாபி -8 பலம், வெள்ளைப் பாசாணம் -8 பலம், செவுரிப்பாசாணம் .8 பலம், வெள்ளைக் குங்கிலியம் -2 பலம், சுடலை எலும்பு களஞ்சு பொன் மேலுக்கொன்று, வசம்பு -8 பலம், உதியம்பட்டை, அரசம்பட்டை இவை எல்லாவற்றையும் அரைத்து வேப்பெண்ணையில் கலந்து வெந்தபிறகு சீலையில் தோய்த்துப் புண்ணின் மேல் போடவும்.

தீரும் வியாதி

தீராத கிரந்திபுன் ஆமம். பூ தின்னித் தண்டுப்பிளவை நாகப்பிளவை, வெடி சூனியம் குளிவாளை, தீராத பழம் புன் இவை தீரும்.

சிரசுப் பீனிசம்குலைக்குப் பால ராமபாண எண்ணெய்

கருவேலம்பட்டை, கையாந்தகரை, கந்தாளஞ்சாறு, வகைக்கு படி-1, ஏலம், இலவங்கம், அதிமதுரம், செங்கழுநீர்க் கோஷ்டம், செண்பகப்பூ, சாதிக்காய், சிறுதேக்கு, அரத்தை,

தாளிச்சாம், சாத்திரவேதி, கிராம்பு. இவை வகைக்கு பலம்- 5 ஆக மருந்து - 11க்கு

செயாந்தகரைச்சாறு, வரத்து நாழி, பசு நெய்யும் நாழி,

நல்லெண்ணையும், காட்டு மருந்து, முசுமுசுக்கைச்சாறு

தாளைச்சாறு - பொன்னாங்காணிச் சாறு-

நெல்லிக்காய்ச் சாறு க்கு ஆக வகை -4க்கு படி- 1,

இவையெல்லாம் ஒன்றாய்க் கூட்டி இடித்து தலைக்குத் தேய்த்து

நாசிக்கு வார்த்து, பகல் இருபது நாழிகையளவில் சீகைக்காயாவது அல்லது உசிலந்தழையாவது தேய்த்து முழுகவும்.

தீரும் வியாதி: பேர்மவியாதி பீனிசம், மண்டைகுலை, கபால வாய்வு, கண்ணில் நீர் வழிதல், மூக்குநீர் விழுகிறது. மண்டை வியாதி, நேத்திரரோகம் முதலானதும் தீரும்.

விஷமுட்டித் சித்தி தைலம்

மகாப் பிரையோகம்

நீர்வெட்டி எண்ணை - நாழி

செந்திருக்கம் எண்ணை - 1 நாழி

ஆதளை எண்ணெய் - 1 நாழி

தேங்காய் எண்ணெய் - 1 நாழி

முட்டைத் தைலம் - 1 நாழி

முதலைநெய் - 1 நாழி

பேய்க் கொமட்டி எண்ணை - 1 நாழி

புங்கெண்ணை - 1 நாழி

நல்லெண்ணை - 1 நாழி

பேய்ப் பீர்க்கெண்ணை - 1 நாழி

சித்தாமணக்கெண்ணை - 1 நாழி
இலுப்பெண்ணை - 1 நாழி
தவளை நெய் - 1 நாழி

இப்பால் நாட்டுமருந்து வகை வேங்கைவயிரம், கரை எறும்படரடி, நாய்ச்கொட்டாந் பட்டை, மறலைமாதளை, மலை ஆதளை, மலை, ஆவிரை, ஈச்சம்பட்டை, ஒதியம்பட்டை, குளவாதன்டம் பட்டை, சோதி விருட்சம்.முடவாட்டுக்கால், வண்டுகொல்லிப்பட்டை, கடலுறாஞ்சிப்பட்டை, வள்ளிவேர், மஞ்சள் கடம்புப்பட்டை, நீர்க்கடம்புப்பட்டை, கருங்குங்கிலிப்பட்டை, வெள்ளைக்குங்கிலியப்பட்டை பிறப்பந்கொடி, அகில்க்கட்டை, தேவதாரப்பட்டை, செஞ்சந்தனப்-பட்டை, பூலாவிருக்கம்பட்டை, மலை ஆமணக்கம் பட்டை, குளிதாமரை நீர்வள்ளிக் கிழங்கு, கோரைக்கிழங்கு, கோலவள் கோவைக்கிழங்கு, கோடங்கிழங்கு காட்டுக் கருணைக் கிழங்கு, புள்நடலைக்கிழங்கு, வெருகஞ்கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு, ஆதளைவேர், அவூரிவேர், ஆனை நெருஞ்சிவேர், சிறு நெருஞ்சிவேர், குப்பைமேனிவேர்த், நாய் வேளைவேர், எருக்கலம் வேர், எகொடிக்கள்ளிவேர், இலைக்கள்ளிவேர், முள்ளுக்கள்ளிவேர், விளாம்பட்டை, கொழுஞ்சிவேர், ஈச்சம்பட்டை, மலைஈச்சம்பட்டை, மலைக்கொட்டைப் பட்டை, மலை விளாம்பட்டை, சாயவேர், உளர்ச்சாயவேர், நிலவேம்பு, வெள்ளிப்பிசின் பட்டை, வலம்புரிடக்காய்ப் பட்டை, வேர்ஊாளவிரையப்பட்டை மலைச் செங்கத்தாரிப்பட்டை, செல்ல கரம்பி, மாத்திப்பட்டை, பேய்ப்புடல், சீந்திக்கொடி, விஉட்டுறுசிரந்தி, பற்படாகம்-8, ஆடாதோடை, கண்டங்கத்திரி, தூதுவளை, சிறுபுள்ளடி, வில்லைவேர், சிறுக்கீரைவேர், பொன்னாங்காணி வேர், தாழிவேர், மருதோணிவேர், இலுப்பைப்பட்டை, வாகைப்பட்டை, உவாயம்பட்டை, செந்தொட்டிவேர், சிவனார்வேம்பு, வெள்ளருகு, கருனொச்சி, வேலாமணக்கு, சென்னா-யுருவிவேர், செம்முள்ளிவேர், பெருங்குறிஞ்சாவேர், சிறுகுறிஞ்சாவேர், வாத மடக்கிவேர், நொச்சிவேர், எலுமிச்சம்வேர், தொகைவளை, புங்கம்வேர், மாவிலிங்கம்பட்டை, புள்முருங்கைப்பட்டை, முருங்கைப்பட்டை, நெல்லிக்கொடி, களச்சிப்பருப்பு, இலைச்சமூலம், மஞ்சட்டிப்பட்டை,

பொடுதழை, குன்றுமணிவேர், கருங்குன்றிவேர், பாடவாிஇலை, ஆமணக்கம்வேர், கருவேலம்வேர், கிலுகிலுப்பை வேர், வெள்வேலம்வேர், நாியுடைவேர், இலந்தைவேர், சத்கொமுத்திவேர், குறுந்தொட்டிவேர், மகிழம்வேர், வெற்றிலைக்கொடி, நீர்ப்பூலாவேர், குழப்பாலைவேர், வெடப்பூலாவேர், சீந்திவேர், வெருகங்கிழங்கு, (லா)மிச்சுவேர், செங்கீரைத்தண்டு, நீர்முள்ளிவேர், பேய்க்கொமட்டி வேர், பேய்ப்பீர்க்குவேர், மஞ்சனாத்திப்பட்டை, புன்னைப்பட்டை, வேப்பம்பட்டை, இலவங்கப்பட்டை, மின்னைவேர், வேலிப்பருத்தி, அகிற்பட்டை, காட்டு மல்லிவேர், நல்ல மல்லிகை வேர், சங்கங்குப்பிச்சமூலம், பெருந்தும்பை, வீழிவேர், பொன்னாங்காணிவேர், பொன்முசுட்டை, பொன்னாவரை, வல்லாரை, வக்கணாத்திப்பட்டை, நிலவாகைச் சமூலமும், அழிஞ்சிப்பட்டை, விடமல்லிகை, குத்தாக்குசமட்டி, கொடிவேலிவேர், செம்பருத்திவேர், நெல்லிப்பட்டை, அத்திப்பட்டை, அசம்பட்டை, தீவைப்பட்டை, நாவல்ப்பட்டை, ஆவிரம்பட்டை, புரசம்பட்டை, வல்லிப்பட்டை, துவரப்பட்டை, தத்திவேர், ஆடுதின்னாப்பாளை, வெள வெங்காயத்தாள், காறகிரப்பட்டை. இவையெல்லாம் கூட்டி கஉஷாயம் ℘ காய்ச்சி தைலம் எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தைலத்துடன் கடைச்சரக்கும் கூட்டி முழுகவும். மேலுக்கு (உடம்பில்) தேய்க்கவும்.

<u>தீரும் வியாதி :</u> வாத, பித்தம், சேற்றுமம், ஊமாந்தை, காசநோய், அண்டவாய்வு, திமிர்வாதம், சர்வாங்கவாதம், ஓடுக்கு, வாதம், நடுக்குவாதம், ஆகுரம சன்னி எட்டு, பின்வீச்சு, முன்வீச்சு, ஆகியவை இத்தைலத்தால் தீரும்.

<u>நேத்திர வாய்வுக்கு எண்ணெய்</u>

நல்லெண்ணை படி- 1, நொச்சிச்சாறு - 1படி, குப்பைமேனிச்சாறு - 1 படி, திப்பிலி - பலம்-5, மஞ்சள் -5பலம், கடுக்காய்- 5 பலம், சுக்கு - 5 பலம், வெள்ள வெங்காயம்-பலம்-5, கஸ்தூரி மஞ்சள் -பலம்-5, காசு. கட்டி பலம்-5, மிளகு- 1படி.

இவைகளைப் பொடி செய்து, எண்ணெயைக் காயவைக்கவும். அதற்கு ஆவரம் விறகு போட்டு எரிக்கவும். என்னை காய்ந்தபிறகு செய்து வைத்த பொடியைப் போடவும். இவ்வாறு காய்ச்சிய எண்ணெயை

...14

தலையில் தேய்த்து பச்சை அரப்புக்கொண்டு நாளித் கொடுக்கால் முழுசி வரவும். பிறகு நொச்சி இலைத்சாறு விட்டு முழுகவும். பத்தியம்:- உப்பு, புளி தவிர்க்கவும் நோய் தீரும்.

சர்வ வாத நாராயண என்னெய்த் தைலம்

வேப்பெண்ணை - 1படி, எருக்கம்பால் - 1படி, நொச்சிச்சாறு- 1படி, முடக்கொத்தான் சாறு- 1படி, ஆக இந்நான்கினையுங்கூட்டி, திரிகடுகு, வெள்ளவெங்காயம், பெருங்காயம், வசம்பு -4 பலம் இவற்றைத் தூள் பண்ணிப்போட்டு வடித்த உள்ளும் கொடுத்து மேலுக்கும் பூச வேண்டும். பிறகு முடக்கொத்தான் நொச்சித்தாளை போட்டுக் காய்ச்சி அந்த நீரைக் கொண்டு வேது கொடுக்க வேண்டும்.

தீரும் வியாதி சர்வ வாதமும் தீரும்.

மகா_பிறுங்காமலத்_தைலம்

பேய்ப்புடல், சீந்திக்கொடி, விஷ்ணுகிரந்தி, பற்படாகம், கஞ்சாங்கோரை, கையாந்தகரை, சிறுகீரைவேர், பொன்னாங்காணிவேர், நன்னாரிவேர், தாழை விழுது, மிஸ்னிவேர், முசுமுசுக்கைவேர்.

இவை வகைக்குப் பலம்-½ ஆனாலும் இராக்கால் தண்ணீரில் வைத்து குறுணியான பிறகு சுக்கு, திப்பிலி, மிளகு, தேவதாரம், செஞ்சந்தனம், சீரகம், சடாமாஞ்சி, மஞ்சட்டி, மரமஞ்சள், ஏலம், இலவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், செண்பகப்பூ, சதகுப்பை, பூலாவிறுக்கம், நாகப்பூ, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, வாய்விளங்கம், கொத்தமல்லி, குறசாணி ஓமம், கர்க்கடக சிங்கி, சிந்தூரத்தை பேரரத்தை இவை எல்லாம் நாழியெண்ணைக்கு ஒரு விராகனிடை நிறுத்துக்கொண்டு கஷாயத்துடனே போட்டு நெல்லிக்காய்ச்சாறு, பசுவின்பால், முந்நாழி எலுமிச்சம்வேர் போட்டு பதத்தில் வடித்துத் தேய்க்கவும்.

தீரும் வியாதி

பித்த ரோகத்துடனே கூடிய வியாதி தீரும்.

வெருகெண்ணை

நல்லெண்ணை - 1படி, வெருகங்கிழங்கு பலம்- 30, அமுக்கிராவேர் -பலம்- 15, பேய்ப்புடல் -பலம்- 30, பர்பாடகம் பலம்- 10 ஐங்சாங்கோரை -பலம்- 20, ஆடாதோடை-பலம்- 10, கண்டங்கத்திரி வேர் -பலம்- 10.

வெருகங்கிழங்கை முக்குறுணி காடிவிட்டு கஷாயமாக நாலு மரக்கால் தண்ணீர் விட்டு காட்டு மருந்து கூடப்போட்டு வெருகங்கிழங்குத் தண்ணீரும், மருந்துக் கஷாயமும் கூடவிட்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், ஏலம், இலவங்கப்பட்டை, அதிமதுரம் செங்கழுநீர், கோஷ்ட்டம், செண்பகப்பூ, சாதிக்காய், நாகப்பூ.

இவையெல்லாம் வகைக்கு விராகனிடை- 1 கஷாயம் வாதத் தரைத்து எண்ணெயில் கலந்து எலுமிச்சை வேர் 10-பலம், கஷாயத்துடனே போட்டுப் பசுவின்பால் இருநாழிவிட்டு வைத்துக் கொள்ளவும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை தேய்த்து முழுகவும்.

பத்தியம் - புளிவிடவும் (முழுகினநாள்).

தீரும் வியாதி: உட்காய்ச்சல், சயம், மாந்தை, பயித்திய

ரோகங்களும், காது சேளாமையும் தீரும்.

சர்வ வண்டுகடித் தைலம்

வேப்பம்பட்டை, புங்கம்பட்டை, விளாம்பட்டை, ஊஞ்சப்பட்டை, கருத்த பொரிசம்பட்டை, வெள்ளைப் பொரிசம்பட்டை, தேக்கஞ்சிராய் இவைகளைப் புடபுடத்தில்த் தயிலம் வாங்கித் தடவவும். உள்ளுக்கும் சற்று உட்கொள்ளவும்.

தீரும் வியாதி: சர்வ வண்டு கடியும் பொரிந்து பட்டுப் போகும்.

வாதத்திற்கு கொம்புத் தைலம்:

வேப்பெண்ணை -½படி, எருமைக்கொம்பு சீவினது

பலம்-1, வெள்ளை - வெங்காயம்-1 பலம், செங்கழுநீர்க் கோஉத்ட்டம் -2 பலம், கற்பூரா சிலாசித்து -2 பலம், அரத்தை -2 பலம் தேங்காய் திருகிதை -2 பலம். இவைகளை எல்லாம் சேர்த்துச் சீலை (சீசலை) யில் சுருட்டி திரியாக்கி வேப்பெண்ணை ஊத்தி எரிய வைக்கவும். திரி எரிய சாய்த்த குத்தத் தைலம் விழும். அந்தச் கருக்குடன் குழைத்துப் பூசவும்.

தீரும் வியாதி: சன்னியும், விசிவும், வாதமுந் தீரும்.

வாதத் தைலம்

வேங்கைப்பட்டை -20 பலம், வில்வவேர் -10 பலம், சித்தாமுட்டி -10 பலம்.

இவை தரித்துப் பலத்துக்கு இரண்டுபடி தண்ணீரவிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்த, நல்லெண்ணெய் -படி-1, பசுவின் பால் -2படி விட்டு இதக்குக் சரக்கம். சடாமாஞ்சில், தேவதாரம், மரமஞ்சள், அமுக்கிலா, கடுக்காய், நெல்லிக்காய், தாணிக்காய், அதிமதுரம், தகரம் அதாவது வெள்ளிலோத்திரம், கச்சோலம், நன்னாரி, எலுமிச்சம்வேர், முத்தக்காசு, கோஉத்ட்டம், செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம் சந்தனம், ஒதப்பு (உவருப்பு) இவைகளை வகைக்கு விராகன் -1 எடுத்து அரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில் வடித்து சனியும், பூதவும் முழுகவும்.

தீரும் வியாதி: சன்னிலுள்ள ரோகம், சிக்கன்னு, சூலை ரோகம், நேத்திரரோகம், அருபூதவாதம், காசம், பிரிசல், தலைவலி இவை சகலமுந் தீரும்.

மகா பிருங்காமலத் தைலம்

வெட்சிப்பூ, இருவாட்சிப்பூ, தும்பைப்பூ, நந்தியாவட்டப்பூ, தாமரைப்பூ, மல்லிகைப்பூ, சாதிப்பூ, தாமரைக் கிழங்கு, அல்லிக்கிழங்கு, கொட்டிக் கிழங்கு, நெய்தல்க் கிழங்கு.

...17

இந்த வகைப் பூவும், கிழங்கும் வகைக்குபடிச்சாறு, செங்கழுநீர்க்கிழங்கு, தாழை விழுது இதுவும் அந்தப்படி, பொன்னாங்கணி சிறுக்கீரை, கையாந்தகரை, சீந்தித்தண்டு, சீதேவி, செங்கழுநீர், பூமிசர்க்கரை, ஓரிலைத் தாமரை, முசுமுசுக்கை பாதிரிவேர், பருத்திவேர், சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், விஷ்ணுகிரந்தி, தண்ணீர்விட்டான் கிழங்கு, நன்னாரிவேர், முத்தக்காசு, இந்த மூலிகை வகைக்கு படி - 1.

செவ்வேள் நீர் -படி- 4, பனைமட்டைச் சாறு -படி- 4.

<u>கடைச்சரக்கு வகை</u>

மிளகு, சீரகம், ஏலரிசி, கொத்தமல்லி, கஉந்தூரி மிளகு, தாளிசப் பத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, மலர்க்காய், சந்தனம் பச்சைக் கற்பூரம், பச்சைப் புனுகு, கஉந்தூரி ஆக வகைக்கு விராகனிடை- 6.

பலாங் கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர், கோஉஷ்டம், கச்சோலம் அதிமதுரம், செண்பகப்பூ, கடுகுரோகணி, மஞ்சட்டி, சாதித்திரவேதி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சாதிக்காய், கிராம்பு, வசுவாசு, அதிவிடையம், சிறுநாகப்பூ, விளாவரிசி, இந்தக் கடைச்சரக்கு வகைக்கு விராகனிடை- 6.

பசுவின்பால் வார்த்தரைத்து, முன் சொன்ன சரசமும் பசுவின்பால்-படி- 4, பூசணிக்காய்ச்சாறு-படி- 4, நல்லெண்ணை படி- 4, இவையெல்லாம் ஒன்றாய்க் கரைத்து வினாயக பூசை செய்து அடுப்பில் வைத்துக் கரண்டி போட்டு அடிப்பத்தாமல் கிளரி களிப்பதத்தில் காய்ச்சி இறக்கி ஒரு கலசத்தில் வார்த்து தானிய புடம் 15 நாள் வைத்தெடுக்கவும்.

<u>தீரும் வியாதி</u> : சுக சரீரத்திற்கு மேற்பட்ட சிரசில் உண்டான ரோகாதி ரோகங்களெல்லாந் தீரும். இது நிச்சயம்.

இது பூரணயோகம்.

தெட்சணாமூர்த்தி துணை செய்யவும்.

...18

மகா பிரசாணித் தைலம்

முதியார் கூந்தல் -பலம்- 10, திசமூலம், வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, முல்லைவில்வம், பஞ்சகம், சித்த மல்லிவேர், பேராமல்லிவேர், ஆடாதொடை, கண்டங்கத்திரி, சிறுவழுதலை ஆக வகைக்கு பலம்- 20.

சிற்றாமட்டி, பெறாமுட்டிவேர், நீர்முள்ளி, செம்முள்ளி, ஆயில்ப்பட்டை, முருங்கை, புள்முருங்கை, சாரடை, ஆமணக்கு, செவ்வியம், குதிரைச் செவி மருந்து வீழிவேர், விடத்தோலாவேர், அழிஞ்சில்வேர், புன்னைவேர், எட்டிவேர், இண்டு வேர், கொள்ளு, உளுந்து, கடலை, செம்புளிச்சை, கொன்றை, நொச்சிக்காய், பருத்தி, எரழிஞ்சி, மாளவன்னக் குறிஞ்சில், துளசிவேர், வெட்பாலைவேர், தூதுவிளை, அவுரி, கருங்காலி, செங்கொட்டை, சணப்புவிரை, அசமதாகம், சித்தழிஞ்சில், புங்கு. இவைகளின் வேர் கூட்டி, கிறதணைன்ன பட்டை. இவை ஒரொன்று பலம்- 10 இடித்துக் கலத் தண்ணீர வைத்துப் பதக்கு நாளியாகக் காய்ச்சிச் சஉநாயத்தில் ஆட்டு மாங்கிஉநம் (நீர்) பதக்கு விட்டுச் கொள்ளவும். பசுவின்பால் பதக்குவிட்டு நல்லெண்ணை குறுணி இதற்குச் சறக்கம்.

முத்தக்காசு, சின்ன கச்சோலம், செம்புளிச்சை, தினையரிசி, கச்சோலம், அசமதாகம், குங்குமம், குக்குலு, அகில்ச்சட்டை, சடுகு, சித்தாமட்டிவேர், அரத்தை கோஉஷ்டம், சாதிக்காய், அரேணகம், அதிமதுரம், சுக்கு, திப்பிலி, மிளகு மஞ்சட்டி, சித்தரத்தை, எலமிச்சம், சிறு கோஉஷ்டம், புலி தடக்கி, நாகப்பூ, செண்பகமொட்டு, ஏலம், இலவங்கம், இலுப்பைப்பூ, திரிபலை, கடுக்காய், நெல்லிமொளி, தாணிக்காய் நல்ல சந்தணம் கடுகு, உளுந்து, பெருங்காயம், இந்துப்பூ, பச்சைவட்டு, செஞ்சந்தணம் வெட்டிவேர், வசம்பு, வெண்மிளகு, அதிவிடையம், முங்கில்விடை, புன்னைக்கொட்டை, கார்போக அரிசி, தகரைவிரை. இவைகளை ஒவ்வொன்று 1-விராகனிடை எடுத்து அரைத்துக் கரைத்து மூன்றுநாளி, இளங்கொதியிட்டு நாலாம்நாளப் பதத்தில் வடித்து மேலுக்கிடவும்.

தீரும் வியாதி: குமார கண்டம், 2ன் மத்தம் பித்தம், பித்தம் விப்புருதி, நடக்கவொட்டாத வாதம், மேல்வாதம், கழுத்து கோணுதல், வாய் கோணுதல், கண் கோணுதல், கை கால் ஆடுதல், கண், வாய் கிட்டுதல், இருப்புக் கடுப்பு, சந்துக் கடுப்பு, இவை யெல்லாம் தீரும்.

அரக்காதித் தைலம்

எருக்குச் சமூலமும் சாறு -4 படி, நல்லெண்ணை -2படி ஆட்டுப்பால் -4 படி.

இதில் கரைக்கும் மருந்து

ஏலம், இலவங்கப்பட்டை, தகரம், செங் குநீர்கோஷ்ட்டம், கடுகு, இந்துப்பு, திப்பிலி, இவை ஒவ்வொன்றும் விராகனிடை எடுத்து அரைத்து பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

தீரும் வியாதி: இத்தை,வளைந்து நிற்கிற வாதம், சந்து பிடிக்கிறவாதம் இரத்த வாதம் ஆகிய 84 வாதமும் தீரும்.

விஷமுட்டித் தைலம்:

எட்டிப் பழச்சாறு-2படி, நல்லெண்ணை 2படி, பசுநெய்-1படி, ஆமணக்கெண்ணை -1படி, பசுவின்பால்-4படி, எருக்கு, நொச்சி, ஊமத்தை, எலுமிச்சம்பழம், கொடிவேலி, இலைச்சாறு, அமுக்குரா, இஞ்சிச்சாறு, மூவிலைச்சி, மாவிலிங்கையிலை, துளசி, கள்ளி, முருங்கையிலை, நிலவூ காயாவாகை, தழுதாளை, புளியிலைச் சாறு,சாரணை, பேய்ச்சுரை, விடச்செருத்திச் சாறு, பேய்ப்பீர்க்கம் இலைச்சாறு.

இவை ஒரொன்றுக்குச் சாறு - 1 படி

இதில் கரைக்க மருந்து

திரி துளசி, பச்சிலை, மரமஞ்சள், கொடிவேலிவேர், மஞ்சள், திப்பிலி, ஏலம், நல்ல சந்தனம், இலவங்கப்பட்டை, குக்குலம், புளியுப்பு, சன்னக்கச்சோலம், அரத்தை, சாதிலிங்கம், பச்சை நாவி, அரிதாரம், மனோசிலை, நேர்வாளம், எலிப்பாசாணம், இவை ஒவ்வொன்றும் ஒரு பலம், எட்டிவிரை -2 பலம் இவை யெல்லாவற்றையும் சூரணமாக்கி, வஸ்திரகாயஞ் செய்து ஒன்றாகக் கூட்டி எண்ணெயில்

....20

போட்டு வடித்துப் பதத்தில் இறக்கி மேலுக்கிட 84 வாதமுந் தீரும்.

வகு நாராயணத் தைலம்

திசை மூலம்- 10, மாவிலிங்கு, ஆமணக்கு, நொச்சி, புங்கு, கருங் ஊலி, வேங்கை, முதியார் கூந்தல், மளவண்ணக் குறிஞ்சி, வட்டத்தொிப்பு, முள் முருங்கை, சீந்திற்கொடி, கொன்றை, ஆடாதோடை தேள்க் கொடுக்கு சாரடை, சித்திரமூலம், நீர்முள்ளி, சதகுப்பை, எருக்கு, தூ தவளை, பச்சிலை, தேவதாரம், செம்புளிச்சை, மஞ்சள், மரமஞ்சள், சிற் சாஞ்சோரி, நில உகாய், பாலைவேர், நெருஞ்சிவேர், இவை ஓரொன்று பலம்- 10.

இதுக்குத் தண்ணீர் கலம்விட்டு பதக்கக் காய்ச்சி, கஷாயம் வடித்து யிது எண்ணெய் -4 படி இதுக்குக் கறக்கம் மகாசாகொளிஞ்சி, சஷீர்சாகோளி மஞ்சிட்டி, அதிமதுரம், சித்தாமட்டி, பாலைவேர், ஏபச்சிலை, தேவதாரம், இலுப்பைப்பூ, திரிகடகம், அரத்தை, மஞ்சளி, மரமஞ்சள், ஆமணக்கம்வேர்ப்பட்டை, அமுக்குராவேர், சந்தனம், செஞ்சந்தனம், கஸ்த்தூரி மஞ்சள், குங்குமப்பூ, அகில்க்கட்டை, சாதிக்காய், தக்கோலம், சென்பகமொட்டு.

இவை ஓரொன்றுக்கு இரண்டு விராகனிடை தன்னிமிட்டான் சாமு -34 இவைகளைப் பொடித்து சூரணம் செய்து எண்ணெயில் போட்டு பதத்தில் வடித்து உடம்பு பிடிப்பிக்கவும்.

தீரும் வியாதி: சகல வாதமுந் தீரும்.

பீனிசத்திற்கு நார்த்தங் ஆதித் தைலம்

நார்த்தம் பழச்சாறு, துளசிச் சாறு, வெத்திலைச்சாறு, கையாந்தகரைச் சாறு, பொன்னாங்காணிச்சாறு, பச்சை மஞ்சள்ச்சாறு, இவைவகைக்கு நல்லெண்ணெய் - 1படி இது தளாவகி காய்ச்சவும். இதற்கு கறக்கம். சுக்கு மிளகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், லவங்கம், சித்தரத்தை கஸ்த்தூரிமஞ்சள், குங்குமப்பூ, ஓமம், சீரகம், சயிந்திலவணம், கோரோசினை இவைஒவ்வொன்றும் பணவிடை எடுத்து சூரணஞ் செய்து எண்ணெயில் போட்டு மமது பாகத்திலிறக்கி நசியம் பண்ணவும்.

<u>தீரும் வியாதி</u>

சலப்பீனிசம், இரத்தப் பீனிசம், சத்திப் பீனிசம், இந்த நாலு வகைப் பீனிசமும் தீரும்.

<u>பரத்துவாசத் தைலம்</u>

(பீனிசத்துக்கு)

அருகம்வேர், நொச்சிவேர், கையாந்தகரை, பொன்னாங்காணி, பசுமஞ்சளி (பச்சை-மஞ்சள்) இவைகள் சாறு வகைக்கு 1படி எடுத்து, நல்லெண்ணை - 1படி அதனுடன் கலந்து துளாவிக் காய்ச்சவும். இதற்குச் சுரத்கம். மிளகு-பலம்-1 உடைத்துப் போட்டு பதத்திலிறக்கி வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

<u>இதற்கு மேல் மருந்து</u>

கோரோசினை - விராகனிடை - 2

இலவங்கம் - விராகனிடை - 2

இரசச் செந்தூரம் - விராகனிடை-2

இவைகளைப் போட்டு பொடி செய்து முன் வடித்த தைலத்தில் போட்டு வைக்கவும். இந்த தைலத்தை ஒருநாளிவிட்டு ஒருநாள் மூக்கிற்கு மூன்று துளியிடவும்.

<u>தீரும் வியாதி:</u> ஆறுவகை பீனிசமுந் தீரும்

<u>நசியத் தைலம்</u>

தும்பை, கையாந்தகரை, நொச்சி, பாகல், முல்லை, மஞ்சளி, இஞ்சி இவையெல்லாஞ் சாறுகொண்டு இறுவகைக்குச் சாறு- 1படி சுத்தம் (குடிநீர்).

அதிமதுரம், சுக்கு, மிளகு, அறிஞ்சி விரை -பலம்-50.

சரக்கு வகைக்கு விராகனிடை-1

சிறுவழுதிலைப் பழச்சாறு - 1 படி, நல்லெண்ணெய்- 1படி இவற்றைச் சூரணம் செய்த தைலத்தில் போட்டு மெழுகு பதத்தில் வடித்து நாசிக்கு மூன்று துளியாக நசியம் பண்ணவும்.

இந்திராணித் தைலம்

புன்னெண்ணை, வேப்பெண்ணை, இலுப்பெண்ணை, நல்லெண்ணை, விளக்கெண்ணை, சவுரிக்கொத்துவேர், அமுக்குறாவேர், மிாகநணை, கொளிஞ்சிவேர், வத்தெற்றுவேர், அவுரிவேர், தராய்வேர், பாலைவேர், ஊமத்தம்வேர், நாரத்தம்வேர், பூனைக்காலிவேர், சிடாயிக்குறும்பி, முசுமுட்டை, புடையன்பாம்பு, நல்லபாம்புக்கண்டம் இவற்றை கஉநா யம் வைத்தெடுக்கவும்.

இதற்கு கற்கம்

அரத்தை, மரமஞ்சள், பூதசரப்பன்பட்டை, செகதிப்பிலி, திப்பிலிமூலம், சிறுதேக்கு, சிவனார்வேம்பு, வலம்புரிக்காய், கிராம்பு, சுக்கு, வெள்வெங்காயம், பெருங்காயம்.

இவைகள் கழங்சுவிழுக்காடு கூட்டி தைலம் பதத்தில் வடித்து சர்வாங்கமும் பிடிப்பிக்கவும்.

84 வாதமும் தீரும்.

இதற்கு-வேது: சதிர்க்கள்ளி, எருக்கு, புளியிலை, துளசி, சித்தாமுட்டி, பேறாமுட்டி, வில்வத்திரி, விளாவிலை, முதியார் கூந்தல், முருங்கையிலை, புங்கயிலை, ஆட்டாங்கொடி நொச்சித்தழை, தழுதாழை, அமுக்குரா, மாவிலிங்கு, ஆடாதொடை, பாவட்டை இவை ஓரொன்று படி, பதக்குத் தண்ணீரிலே வேக வைத்து வேது பிடிக்கவும்.

தீரும் வியாதி:- இதனால் 84 வாதமும் தீரும்.

நேத்திர ரோகத்துக்கு வில்வாதித் தைலம்

நல்லெண்ணை - 1½படி, வேங்கைமரச்சிராய், சீந்திக்கொடி, வில்வேர், சித்தாமட்டிவேர், இவை ஒவ்வொன்றுக்கும் பலம்- 2½ இவற்றை இடித்துப் பதக்குத் தண்ணீர்விட்டு நாழியாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இதற்குக் கறக்கம்:- அமுக்கராவேர், சித்தா முட்டிவேர், அரத்தை, நாகமத்தி, கோஉந்ட்டம், முத்தக்காசு, சந்தனம், மஞ்சள், கடுகுரோகணி,

சதகுப்பை, பெருங்குரும்பை, திப்பிலிமூலம், தேவதாரம், செவ்வள்ளிகொடி, அதிமதுரம், இலாமிச்சம்வேர், பசுவின்பால்- 1படி இவை வகைக்கு விராகனிடை- 2.

இவைகளை சூரணம் செய்து எண்ணெயில் போட்டு.

தீரும் வியாதி: நேத்திரரோகம், சிரோவாய்வு, கண் சிவப்பு தீரும்.

பித்த நேத்திர ரோகத்துக்குளாரிச் சேளாதித் தைலம்

இளநீர் பதக்கு, நல்லெண்ணை-நாழி, பால்- 4, நாளி இதுக்குக் கறகம் அதிமதுரம், சந்தனம், குங்குமம், நன்னாரிவேர், அகில்க்கட்டை, கோஉஷ்ட்டம், ஏலம், இலவங்கம், லவங்கப்பத்திரி, செங்களனீர்க்கிழங்கு, தாமரைத்தாளு, மாஞ்சில், தண்ணிவிட்டான் கிழங்கு, மதுரம்,

ஆரோக்கிந்துக்கு காரணமிகுதி இல்லாதே எக்காலமும் உண்டுவந்தால் விகடத்திற்க்குக் காரணமாக இருக்கும்.

இனி சரேத்தில் வகை சொல்லுவான்.

காரம்; கசப்பு, துவர்ப்பு இந்த மூன்று ரசங்களினாலே வாதஞ் சோபிக்கும்.

காரம், புளிப்பு, உப்பு இந்த மூன்று விதங்களினாலே பைத்தியம் பிறகோபிக்கும்.

மதுரம், புளி, உப்பு, இந்த மூன்று விதங்களினாலே சேற்^ம^மம் பிற கோபிக்கும்.

இதுக்கு விரோதமான மூன்று வகை ரசங்கள் (எது எவை) என்றால்,

மதுரம், புளிப்பு, உப்பு இந்த மூன்று வகையும் வாதத்தைக் கெடுக்கும். துவர்ப்பு, கசப்பு, மதுரம். இந்த மூன்று வகை ரசங்களும் பித்தத்தைக் கெடுக்கும். துவர்ப்பு, கசப்பு, காரம் இவை மூன்றும் சேத்துமத்தைக் கெடுக்கும்.

ஆரோக்கிய ரசம் மதுரமான ரசங்களைப் புசிக்கிறது. பிறகு லவணம், புளிப்பு இவைகளைக் கட்டிக் கொள்கிறது. இதற்குப் பிறகு இந்த மூன்று வகை ரசங்களுக்குள்ளே எதாகிலும் அறிந்து தனக்குத்தக்க இச்சையான ரசம், தன்னுடைய வயிற்றிற்கான ரசம் புசித்தல். மதுரம்

சாரம் கண்ணிற்கு இதவும் தாது விருத்திக்கும். புளிரசம் வாய்வை சீழுக்கு வாங்கும். இருதய (இதயம்)த்திற்கு இதவாயிருக்கும். தீபனமுண்டாயிருக்கும். காரங்கள் ஆரோக்கியம் பண்ணும்.

லவணம் சோதிக்கும், பசி உண்டு பண்ணும். இது குளிர்ச்சி யுண்டாக்கும். காத ரசங்கள் சூலை லவங்களைக் கட்டி வீங்கியிருந்தாலும் விடுவிக்கும். தீபன முண்டாக்கும்.

கசப்பு வயிற்றுக்கு வயிற்றுக்கு சீரணகாரி சீதத்திற்கும், தாகத்திற்கும் நல்லது. பேதி காரிது வருபவற்றை மந்திக்கும். மலத்தைக் கட்டும், சரீரம் வரும்.

இனி மூலிகை வகை கேளாய்

என்ணை படி-4, கட்டித் தாமரை மறை பூத்தது விராகனிடை.2, இலாமிச்சம்வேர் விராகனிடை.2, கற்பூரம் விராகனிடை-2, தேவதாரம் விராகனிடை-2, கோஉஷ்டம் -விராகனிடை-2, தக்கோலம் -விராகனிடை.1, மஞ்சட்டி -1, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், நாகேசுரம், நன்னாரிவேர், அதிமதுரம், நெய்தல்கிழங்கு, தானிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், சாதிபத்திரி, செண்பகமொட்டு, கோரோசனை, சடாமஞ்சி முந்திரிகைப்பழம், மரமஞ்சள் வகைக்கு விராகனிடை-1.

இவைகளை அரைத்துக் கரைத்துப்பதத்தில் வடித்து தலைக்கிட்டு, மூக்கில்விட்டு காதிலுமிடவும்.

<u>தீரும் வியாதி:-</u> தலைநோய், கண்நோய், மூக்கில் வியாதிகள், பைத்தியம், பீனிசம், சர்வமான தலை நோயும் தீரும்.

சகல கிரந்திக்கு சிவனார் வேம்புத் தைலம்

சிவனார் வேம்பு சிறுக நறுக்கி முடாவிலிட்டு பூப்புடத் தைலம் வாங்கிச் சரி தேர்விட்டு திப்பிலி பலம்-1, வாய்விளங்கம் பலம்-½, கொத்தமல்லி பலம்-½.

இவைகளைப் பொடியாக்கிக் காசிடைத் தைலத்தில் குழப்பிக் காலையில் சாப்பிடவும்.

இவ்வாறு ஒரு மண்டலங் கொள்ள கிரந்தியெனப் பட்டதெல்லாம் தீரும்.

குக்குலாதித் தைலம்

முற்றிய வேப்பம்பட்டை, சீந்தித்தண்டு, ஆடாதொடை, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, இவை வகைக்கு பலம்-5 கூட்டி 4 வள்ளத் தண்ணீர்விட்டு நான்காகக் காய்ச்சி, ஏழுநாள் காய்ந்து , எட்டாம்நாள் வடிக்கவும்.

இதில் ஒரு படி நெய்விட்டு, வாய்விளங்கம், அக்கலாக்காரம், தேவதாரம், கெசதிப்பிலி, எவச்சாரம், சவுக்காரம், சுக்கு, மஞ்சள், மரமஞ்சள், சதகுப்பை, கோஉஷ்ட்டம், அதிமதுரம் , விளாவிரை, வெப்பால விரை, மிளகு, ஓமம், கொடிவேலிவேர், கடுகுரோகணி, சடாமாஞ்சி, திப்பிலிமூலம், மஞ்சட்டி, சாதிக்காய், அதிவிடையம். இவை ஒவ்வொன்றும் ஒரு பலம் எடுத்தப் பொடி பண்ணி, நெய்யும், கஉ்ஷாயமும் காய்ச்சிச்சி சூரணத்தைத்தூவி, சுத்தி செய்த குக்குளம் பலம்-5 இதவும் சூரணஞ் செய்து தூவி தைலப் பதத்தில் வடித்து இந்தக் கிருதத்தில் போற வியாதிக்குக் கொடுக்கவும்.

அக்கரைத் தைலம்

எருக்கு சமூலமும், அழுக்குலாவேர், பெறாமுட்டி, நீர்வள்ளிக்கிழங்கு வகைக்கு பலம் தண்ணீர் -வள்ளம்-4 எட்டொன்றாய்க் காய்ச்சி இறுத்து நல்லெண்ணை படி-3, அதிமதுரம், கடுகுரோகணி, சந்தனம், மஞ்சட்டி, நாகப்பூ, தக்கோலம், சாதுக்சீரகம், எலுமிச்சம்வேர், தேவதாரம், வாய்விளங்கம், மலைமஞ்சிக்கிழங்கு.

இவையெல்லாம் சமனாய் சூரணம் செய்து தயிர்த்தண்ணீர் கலந்து சாகாதேவிச்சாறு, கரந்தைச்சாறு-படி-2, கூடக் கலந்து, காய்ச்சிச்சி, மெழுகு பதத்தில் வடித்து மேலுக்குமிட்டு உள்ளுக்குங் கொள்ளவும்.

தீரும் வியாதி :- முறைக் காய்ச்சல், விஉ்ஷசுரம், சீதச்சுரம்விடும். நாலுக்கு நாள் பலமுண்டாம்.

வண்டுகடிக்குத் தைலம்

செம்புளிச்சம்பட்டை, நஞ்சுண்டான்பட்டை, காரஇண்டம்பட்டை, பேய்ப்பீர்க்கம் விரை, எட்டிவிரை, பேய்ச்சுரை, விளாம்பட்டை,

குன்டுமணி, குறுஞ்சாபட்டை, சாருவிட்டான் பட்டை, ஈசுவரவேர், சிறுகுரிஞ்சாவிரை, முருங்கைவேர், சுறு ஆவகை வேர், கிளிமூக்குக் கிழங்கு நெரிவிஷநம், எருக்கம்வேர், பிரண்டைவேர், நிழலலத்தி, குழிதோண்டி, இவைகளை மிடாவில்ப் போட்டுத் தைலம் இறக்கித் தடவவும்.

தீரும் வியாதி:- வன்டுகடி சகலமுந்தீரும்.

சுந்பூர வள்ளித் தைலம்

சுந்பூர வள்ளிச் சாறு, சங்கங்குப்பி, நீர்முள்ளி, சங்கு, யீருள்ளி, இருசிவதை, இவை ஒன்றுக்கு சாறு படி- ஆட்டுக்கோமயம், கமுதைப்பால், பசுவின்கோமயம் இவை படி- 1 விளக்கெண்ணை படி- 2, எல்லாம் வார்த்து புளியாரை, சித்திரமூலம், நன்னாரிவேர், வெள்ளருகு, நத்தைக்சொளி, அவரைக்கிழங்கு, ஆகாசக் கெருடன் கிழங்கு இவையெல்லாவற்றையு மிடித்து பாலில் கரைத்சு எரித்துப் பதத்தில் வடித்து உள்ளுங் கொன்டு மேலுந் தடவவும்.

தீரும் வியாதி:- ஒன்பத சோபை, சீறிப்புழு, ரத்தம்பித்தம், காமாலை, பான்டுரோகம், மிடத்து வீக்கம், சோதரம் இவை எல்லாந் தீரும்.

வாத சன்னி, கைகால், முடம், வாத சாலாந்தகத் தைலம்

நிர்நொச்சியிலைச் சாறு, புளியிலைச்சாறு, எருக்கம்பால், காடி, வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணை, இவை சேரத் தனி ஒன்றுக்கு ஒவ்வொரு படி வெள்வெங்காயம் பலம்- 1½ அரைத்துக் கலந்து காய்ச்சி மெழுகு பக்குவத்திலே வடித்தப் பூசவும்.

தீரும் வியாதிகள்:- குழந்தைகள் மாந்தவலிப்பு, என்பத வாத சன்னிகளி இவையெல்லாம் தீரும்.

சன்னி நாயகத் தைலம்

வேப்பெண்ணை படி- ½, வெள்ளாட்டுப் பால் படி- ½, வேலிப்பருத்திச் சாறு படி- ½ புளிப்பிசைந்த குளம்பு படி- ½ இவை யெல்லாங் கூட்டி எரித்து வடித்து மேலுக்கு பிடிப்பிக்கச் சகல சன்னியுந் தீரும்.

பூநாகத் தைலம்

மண்ணுக்குள்ளிருக்கின்ற நாகப்பாம்பு, ரசம், வெண்கருகு, வேப்பம், பருப்பு, சாம்பிராணி, மஞ்சள் இவை சமனளவு எடுத்து உலத்தி இடித்து சூரணஞ் செய்து இரண்டு பங்கு எலுமிச்சம் பழச்சாறு, சரி என்னெண்ணை கூட்டிச் காய்ச்சிப் பதத்தில் வடித்து மேலெங்கும் நனைக்க வேண்டும்.

தீரும் வியாதி :- சன்னி, பாதம் பாண்டு திரும்

ஆமணக்குத் தைலம்

ஆமணக்கம்வேர் -பலம்- 10, கண்டங்கத்திரி பலம்- 10, சதகுப்பை -பலம்- 10, தெலுங்கில் மசுப்பால் -பலம்- 10 அரத்தை- பலம்- 10 இந்துப்பு -பலம்- 10.

